ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2022.08.12 |

# ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவை நிறுவுதல்

இலங்கை மத்திய வங்கியானது பொருளாதாரத்தின் முக்கிய ஆர்வலர்களுடனான அதன் ஈடுபாட்டினை விரிவுபடுத்தும் நோக்குடன் முன்னர் தொழிற்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு என்பவற்றை மாற்றீடுசெய்து ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவினை நிறுவியுள்ளது. ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவிற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் பொருளியல் பேராசிரியரான **பேராசிரியர் சிறிமால் அபேரத்ன** தலைமை வகிப்பதுடன் உறுப்பினர்களாக, தனியார்துறையையும் கல்வித்துறையையும் சேர்ந்த தலைசிறந்த பின்வரும் 17 பேர் அங்கம்வகிக்கின்றனர்.

.

- **திரு. ஆஷிக் எம் அலி,** தலைவர், மென்பொருள் பணிகள் கம்பனிகளுக்கான இலங்கை அமைப்பு
- **திரு. கபில பி ஆரியரத்ன,** தலைவர், இலங்கையிலுள்ள வங்கிகளின் சங்கம்
- **திரு. சஞ்சய பண்டார,** தலைவர், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகம்
- **திருமதி. தமிதா குக்,** பிரதம நிதியியல் அலுவலர், ஸ்டேசன் கம்பனிகள் குழுமம்
- **முனைவர். பிரியங்க துனுசிங்க,** சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்
- **திரு. பிரியந்த பர்னாந்து,** தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
- **திரு. முர்தஷா ஜபர்ஜி,** தலைவர், அட்வகேட்டா நிறுவகம்
- **திரு. கிறிஸ்தோபர் ஜொசுவா,** முகாமைத்துவப் பணிப்பாளர், அக்ஸஸ் இன்ஜினியரிங் பிஎல்சி
- **திரு. றொஹான் மசாகோரல,** தாபகர், ஷிப்பர்ஸ் அகடமி கொழும்பு பிரைவேட் லிமிடெட்
- **திரு. றெயாஸ் மிஹுலார்,** நிறைவேற்றுத் தரமற்ற தலைவர், பைரஹா பார்ம் பிஎல்சி
- **திரு. அஷ்ரப் ஒமர்,** பிரதம நிறைவேற்று அலுவலர், பிரான்டிக்ஸ் லங்கா லிமிடெட்
- **திரு. லக்ஷ்மன் சில்வா,** முன்னாள் பிரதம நிறைவேற்று அலுவலர், டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- **திரு. றொஹான் தென்னகோன்,** தலைவர், இலங்கை நிதி நிறுவனங்களின் அமைப்பு
- **திரு. இராஜேந்திர தியாகராஜா,** முன்னாள் தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம்
- **பேராசிரியர் லக்ஷ்மன் ஆர் வட்டவல,** தலைவர், இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்
- **முனைவர் கணேசன் விக்னராஜா,** சிரேஷ்ட ஆராய்ச்சி இணைப்பு அலுவலர்
- **திரு. அனுஷ்க விஜேசிங்க,** பொருளியலாளர் மற்றும் இணைத் தாபகர், வினைத்திறன்மிக்க எதிர்காலத்திற்கான நிலையம்

உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் முதன்மை வகிபாகம் ஒட்டுமொத்த பொருளாதார குறிப்பாக பொருளாதாரத்தின் நாணய மற்றும் நிதியியல் துறைகளின் அபிவிருத்தியினைக், கருத்திற்கொண்டு பொருளாதார நிலைமைகள் மற்றும் தோற்றப்பாடு பற்றி தனியார் துறையினதும் கல்வித்துறையினதும்

அபிப்பிராயங்களையும் எண்ணப்பாங்குகளையும் எடுத்துரைப்பதாகும். மேலும், இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் கொள்கைசார்ந்த வழிமுறைகள் மீது பொருளாதார ஆர்வலர்களின் நோக்கிலிருந்து பின்னூட்டலை வழங்குவதற்கு ஆர்வலர் ஈடுபாட்டுக்குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதுடன் இதனூடாக மிகவும் ஆலோசனைபெற்ற விதத்தில் சிறந்த கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினை இயலச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவின் ஆரம்பக் கூட்டம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி நந்தலால் வீரசிங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட அலுவலர்களின் பங்கேற்புடன் இலங்கை மத்திய வங்கியில் 2022 ஓகத்து 10 அன்று இடம்பெற்றது.





[ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவின் ஆரம்பக் கூட்டப் புகைப்படங்கள்]